# இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சியளிக்க தகுதியுள்ள நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன- மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.

மயிலாடுதுறை மாவட்டம் மகளிர் திட்டம் மூலம் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புடன் கூடிய தொழில்திறன் பயிற்சி நடத்திட அனுபவம் வாய்ந்த தகுதியுள்ள பயிற்சி நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பயிற்சி நிறுவனமானது smart/skill india portal nsdc மூலம் பயிற்சி நடத்த அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

Pmkk(Pradhan mandri Kaushal kendra) திட்டத்தில் பயிற்சி நடத்த அனுமதி பெற்ற பயிற்சி நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பயிற்சி கூடமானது உரிய கட்டமைப்பு வசதிகளை பெற்றிருக்க வேண்டும்.ஏற்கனவே அரசு துறை சார்ந்த திட்டங்களில் பயிற்சி அளித்த நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 13.09.2021 அன்று மாலை 5 மணிக்குள் திட்ட இயக்குநர் ,மகளிர் திட்டம், கோட்டாட்சியர் அலுவலக பின்புறம்,மயிலாடுதுறை என்ற முகவரிக்கு நேரிலோ தபாலிலோ சமர்ப்பிக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.